**மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 Vg;uல் 07 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 Vg;uல் 09 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 07 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்.

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 2 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா.16,000 தொகையான கணக்காய்வுக் கட்டணம் கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் யுநெப்ஸ் (UNOPS) நிறுவனத்திடமிருந்து அன்பளிப்பாக பெறப்பட்ட 03 அலுவலக வாகனங்களின் பெறுமதி, சபையால் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) கையிருப்பு பொருட்களில் ரூபா.47,419 கூட்டு மொத்த பெறுமதியான பொது பாவனைப் பொருட்கள் மற்றும் மின்சாரப் பொருட்கள் 1989 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்த முடியாதவையாக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றை ஏடுகளில் இருந்து

பதிவழிக்காது நடவடிக்கை எடுக்காமையால் நிதிக்கூற்றில் கையிருப்பு அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) நிலையான வைப்பு தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா.51,584 தொகையான வட்டி வருமானம் கணக்குகளுக்கு கொண்டுவரப்படவில்லை.

**1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டியவைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) களுவாஞ்சிக்குடி பொதுச் சந்தைக் கடைத் தொகுதியின் 19 கடைகளை வாடகைக்கு பெற்றவர்களிடமிருந்து 1991 ஆம் ஆண்டு தொடக்கம் 2003 ஆம் ஆண்டு வரைக்குமான காலப்பகுதிக்குரிய வாடகை நிலுவை ரூபா.92,676 தொகையை அறவிடுவதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் பராமரிக்கப்படும் நாளாந்த சந்தையிலுள்ள 08 கடைகளுக்காக 1985 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையுமான காலப்பகுதிக்குரிய ரூபா.3,110,486 தொகையான குத்தகை நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

(இ) இலங்கை மின்சார சபையிடமிருந்து பெறவேண்டியதாக ரூபா.167,580 தொகை நிதிக்கூற்றுக்களில் 1989 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாகக் காட்டப்பட்டு வருகின்ற போதிலும் அதனை அறவிடுவதற்கோ அல்லது கணக்கிலிருந்து பதிவழிப்பதற்கோ கணக்காய்வு திகதியான 2015 யூன் 30 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.5 ஆவணச் சான்றுகள் இன்மை**

ரூபா.85,211,170 கூட்டு மொத்த பெறுமதியான காணி கட்டடம், பொறித்தொகுதிகள் இயந்திரங்கள் என்பன தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிதி நிருவாக விதிகள் | |
| (i) அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | பணம், களஞ்சியப் பொருட்கள் மற்றும் என்பவை நான்கு உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ii) அத்தியாயம் III இன் பிரிவு 81 | காணி உரிமைமாற்றல் சம்பந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கும் ஏனைய கொடுக்கல் வாங்கல் சம்மந்தமான தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பொதுத் திறைசேரியின் பணிப்பாளருக்கும் தண்டப்பணங்களை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் நீதிமன்றங்களின் பதிவாளருக்கும் ஓவ்வொரு காலாண்டு இறுதியிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் X இன் பிரிவு 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான காரணங்களின் விளக்கத்தை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) அரசாங்க நிதிப் பிரமாணம் 396 (ஈ) | வழங்கப்பட்ட ஆனால் 06 மாதங்களுக்கு மேலாக கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா.169,564 பெறுமதியான 15 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் கணக்காய்வுத் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (இ) பிஎப்/437 ஆம் இலக்க பொதுநிதி சுற்றறிக்கை | வாகனங்களின் காப்புறுதி தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து அல்லது வரையறுத்த இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் இதற்கு முரணாக 06 வாகனங்களுக்கான காப்புறுதி பத்திரமானது தனியார் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து ரூபா.7,450 தொகை செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2014 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.6,714,577 ஆக இருந்ததுடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.4,371,982 ஆக இருந்தமை மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா.2,342,595 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

## 2.2 வருமான முகாமைத்துவம்

### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

**(அ) தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கான கட்டண அறவீடு**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவிற்கு அமைய சபையினால் வருமானங்களை அறவிடுவதற்காக உபவிதிகளை சட்டமாக்கத் தவறியதன் காரணமாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் தொலைத் தொடர்பு நிறுவனங்களால் நிறுவப்பட்ட 12 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கு நிறுவுதல் கட்டணம், வருடாந்த உரிமம் என்பன தொடர்பாக பெறக்கூடிய அண்ணளவாக ரூபா.792.000 வருடாந்த வருமானத்தை இழந்துள்ளது.

**(ஆ) வீதவரிகள்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134,158 மற்றும் 159 ஆம் பிரிவுகளுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2014 ஆம் ஆண்டிற்கான வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 யூன் 30 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) முத்திரைக் கட்டணம்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணத் தொகையினை கணிப்பீடு செய்து காணிப் பதிவாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.3 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ) சபைக்குச் சொந்தமான ஆயுள்வேத வைத்தியசாலைக்கான ஆயுள்வேத வைத்திய அதிகாரியையும், மருந்தகரையும் நியமிப்பதற்கு பொதுத்திறைசேரியினால் 2012 ஆம் ஆண்டு அனுமதி வழங்கப்பட்ட போதிலும் வைத்தியரை நியமித்து மக்களுக்கு சேவையை வழங்க கணக்காய்வுத் திகதியான 2015 யூன் 30 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச்சட்டம் மற்றும் 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டங்களுக்கு அமைய மீளாய்வாண்டு காலப்பகுதியில் நாட் சம்பள அடிப்படையில் நியமிக்கப்பட்ட பதினைந்து ஊழியர்கள் தொடர்பாக மீளாய்வாண்டிற்கான மேலாப நிதியத்திற்கான பங்களிப்பு பணம் ரூபா.75,852 தொகையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பு பணம் ரூபா.11,375 தொகையும் அந் நிதியங்களை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1975 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி இளைப்பாற்றுச் சம்பள விதிகள் மற்றும் 1978 யூன் 07 ஆம் திகதிய 320/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின்படி பிரதேச சபையின் ஐந்து ஊழியர்களிடம் அறவிடப்பட்ட ஓய்வூதிய பங்களிப்பும் அந்த ஊழியர்களுக்காக சபையால் செலுத்த வேண்டிய ஓய்வூதிய பங்களிப்பும் சேர்ந்த ரூபா 1,311,298 கூட்டு மொத்த தொகையை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பிவைப்பதற்கு 2015 யூன் 30 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களால் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட 04 மோட்டார் வாகனங்களின் உரிமையை சபையின் பெயரில் மாற்றம் செய்வதற்கு 03 ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 3.1 உள்ளகக் கணக்காய்வு

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீரமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்ட தற்கமைய சபையில் உள்ளக கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4 முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான முகாமைத்துவம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு